1982 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே தங்களுடைய கருத்தைத்தான் நானும் சொல்லலாம் என்று இருந்தேன். 15 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கொடுத்தால் போதும் என்ற முறையில் இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கிறோம். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில், 188 கோடி ரூபாய் இதற்காகச் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டு இருக்கிறது. ஆந்திராவைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தனியாகச் செலவாகலாம். நம்முடைய மாநிலத் தப் பொறுத்தவரையில் நாம் இந்த மதிப்பீட்டைச் செய்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் இந்த வேலைகள் விரைவில் முடிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடுமுடியாறு அணைத் திட்டம்.

* வினா எண் 730—திரு. என். எஸ். வி. சித்தன்: திரு. ரா. உமாநாத்: திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வள்ளியூர் கொடுமுடியாறு அணைத்திட்ட வேலைகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள் ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) (ஆ) இந்த நீர்த் தேக்கத்திட்டத்திற்காகக் கிடைக்கக்கூடிய நீரின் அளவை சரியாக கணித்து, திட்டத்தில் சாத்தியக்கூறுகளையும், சரியான வடிவமைப்பையும் நிர்ணயிக்க அறிக்கை அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக்கொள்ளப்பட்டார். மேற்படி அறிக்கை 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின் அரசிற்கு அனுப்பி வைக்கப்படும் என தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கூறியுள்ளார்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொடுமுடியாறு திட்டத்திற்காக இதுவரையில் 30 இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. மூன்று ஆண்டு கால நீர் கணக்கை எடுத்துப் பார்த்து, கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கை மிக விரைவில் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டு அங்கேயுள்ள இயந்திரங்கள் அகற்றப்பெற்றபோது, அங்கே ஒரு

லாரி எம்.டி.ஒய். 8621 அகற்றப்பெறவில்லை. அந்த லாரி இன்றும் நின்று கொண்டு இருக்கிறது. அது அகற்றப்பெறவில்லை. 3 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டதாக நான் அறிகிறேன். ஆகவே, இந்த ஆண்டு நடுநிலை நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதத்திற்குள் அந்த அறிக்கை வந்து விடும் என்று தகவல் தரப்பட்டுள்ளது. அறிக்கை வந்தபிறகு, அரசு தக்க முடிவை எடுக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் போட்டு ரொம்ப வருஷம் ஆகி விட்டது என்று கேள்விப்பட்டேன். எந்த வருஷத்தில் அடிக்கல் போட்டார்கள், அடிக்கல் போடுகிறபோது எஸ்டிமேட், ஸ்கீம் பைனலைஸ் செய்து, எகனாமிக்கலாக இருக்கும் என்று முடிவு செய்த பிறகு தானே அடிக்கல் போட்டு இருக்கிறார்கள். அப்போது எகனாமிக்கலாக இருந்தது என்று அசெஸ் செய்த பிறகு, இப்போது மறுபடியும் 'ரீ-அசெஸ்மெண்ட்' செய்வதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டத்தை அரசு முதலில் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டது. அன்று அங்கே ஒரு அணைக்கட்டைக் கட்டலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் ஆய்வு வேலைகள் செய்யப்பட்டு, 160 இலட்சம் செலவில் அத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொல்லப்பட்டன. 1975 ஆம் ஆண்டில் ஒரு அரசாணையில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பிறகு அந்த ஒப்புதலின் அடிப்படையில் விரிவான ஆய்வுகள் 'பிரைஸ் எஸ்கலேஷன்' எல்லாம் கணக்கிட்டு 223 இலட்சத்திற்கு அந்த மதிப்பீட்டை 1976 ஆம் ஆண்டில் அனுப்பினார்கள்.

1976 ஆம் ஆண்டு என்பது தமிழக அரசிலே ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்திய ஆண்டு. அப்படி வந்தவுடனே பொதுப் பணித்துறையின் மூதல்நிலை அதிகாரிகளான சீஃப் இன்ஜினியர் முதற்கொண்டு எல்லோருமே இந்தத் திட்டத்தை எடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் வருவாய்த்துறை மற்றும் துறைகளிலே உள்ளவர்கள் இந்தத் திட்டம் பொருளாதார ரீதியிலே கட்டுப்படியாகக்கூடியதல்ல, இந்தத் திட்டத்தால் பயன் இல்லை எனவே இவ்வளவு பணம் செலவழிக்கவேண்டியதில்லை என்று இடையிலே ஒரு கருத்தை வைத்திருக்கிறார்கள். அதற்கிடையிலே வறட்சி நிவாரண நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அடிப்படையான வேலைகளை நிறைவேற்றி விட்டார்கள்.

ஆனால் இதற்கிடையிலே நிலநீர் ஆணையாளர் அந்தத் திட்டம் இங்கே வரக்கூடாது என்று வலியுறுத்திய காரணத்தால் அந்தத் திட்டம் அப்போது செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாம் திரும்பவும், இவ்வளவு செலவழித்ததற்குப் பிறகு ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதி இந்தத் திட்டம் ஏன் நிறுத்தப்பட்டது என்பது பற்றிப் பார்த்தோம். பிறகு கடைசியாக நீர்வளம், அதாவது ஹைட்ராலஜி எப்படி இருக்கின்றது என்று ஒரு மூன்று ஆண்டுகளுக்கு சர்வே செய்து 982 ஏப்ரலுக்குள்ளாக அறிக்கை கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று முடிவு எடுக்கலாம் என்பது பற்றி அரசு யோசிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கெடுமுடியாறு திட்டம் சம்பந்தமான பிரச்சினை நான்கைந்து ஆண்டுகளாக கிளப்பப்பட்டு வருகின்றது. ஒரு பெரிய மனிதரின் நிலம் இந்தத் திட்டத்தின் காரணத்தால் கொஞ்சம் தண்ணீரில் மூழ்குகிறது என்ற காரணத்தால் அவர் தடுத்ததாகவும், அதனால்தான் இந்தத் திட்டம் நிற்கின்றது என்றும் அந்தப் பகுதியிலே உள்ள பெருவாரியான மக்கள் பேசுகிறார்கள். மூன்றாண்டு காலத்திற்கு தண்ணீர் வரத்து எவ்வளவு என்று கணக்கிட்டு அங்கே ஒரு அணை கட்டலாம் என்றுதான் பரிந்துரை செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

அந்தப் பெரிய மனிதருடைய முட்டுக்கட்டையை உடனடியாக தடுத்து நிறுத்தி அந்தப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறக்கூடிய அந்தத் திட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்ற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை அரசு கவனத்தில் கொள்ளும். ஏப்ரல் மாதத்திற்குள்ளாக அதாவது இந்த மாதத்திற்குள்ளாக அறிக்கை வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இன்னும் 26 நாட்கள்தான் இருக்கின்றன. ஆகவே, அது வந்தவுடன் அதைப் பார்த்து பரிசீலனை செய்து எவ்வளவு விரைவிலே அந்தத் திட்டத்தைப் பற்றி யோசிக்க முடியுமோ அந்த அளவுக்கு யோசிக்கலாம்.

தமிழ்நாட்டில் காற்றாலை கழகம் அமைத்தல்.

* வினா எண் 731—திரு மா. சின்னராஜு: திரு.செ.செம்மலை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் Wind Mill Corporation ஏற்படுத்தும் செயற் குறிப்புஅரசின் பரிசீலனையில் உள்ளதா?